# யார் அந்தக் கடவுள்?

பிடிச்சு வெச்ச பிள்ளையாருக்கு முகத்தை மாத்தி வெச்சாங்க!
தொந்தி கணபதின்னு பெயராலேயும் சேர்த்துதானே வெச்சாங்க!
அழகான முருகனையும் அந்த சுப்பிரமணியனோட சேர்த்து விட்டாங்க!
ஆனாலும் தமிழன்னு அடையாளம் ஓங்காரப் பொருளாலே ஆச்சுங்க!

இச்சா கிரியான்னு இரண்டு மனைவி பேரு வள்ளி தேவானை ன்னாங்க!
ஈசனுக்கோ இருவருமே பிள்ளையாக்கி சிலகதைகள் சொன்னாங்க!
அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பையான்னு பெருமை கூட்டி வெச்சாங்க!
கொற்றவையும் பெற்றதுவோ பலஅவதாரம் காளியுமாய் ஆனாங்க!

அப்புறமாய் பார்வதி தேவின்னு ஈசனுக்கு துணையாக்கி விட்டாங்க!
கண்ணன் கூட நமது கடவுள் தானேங்க! காடுதானே அவருக்கு வீடுங்க!
கருப்பாய் அவன் இருந்ததாலே, கிருஷ்ணன்னு பேர் கூட்டி வெச்சாங்க!
கடவுளுக்கும் துணையைச் செய்து, கருத்தாக பலகதைகள் சொன்னாங்க!

கருப்பு சாமி, சுடலைமாடன், சொந்தமுன்னு சொல்லவில்லை தானுங்க!
விருப்பு கொண்டு யாருமிங்கே ஓடியாட இல்லீங்க! தள்ளியோட இல்லீங்க!
கருத்தாய்ச் சொன்ன கதைகளிலே யாவருந்தான் கலங்கிப் போய் நின்னாங்க!
கண்ணைக் குத்தும் சாமீன்னாக்க மக்களுந்தான் கலங்கித்தானே போவாங்க!

பொன்னை வெச்சு பூவை வெச்சு புதுப் புதுசாய் கதைகளுந்தான் சொன்னாங்க!
மண்ணில் இந்த மக்களுந்தான் மயங்கி அதுலே வீழ்ந்து தானே போனாங்க!
கொண்ட நல்ல அறிவுந்தான் அதிலே குடம் குடமாய் சரிஞ்சு போய் நின்னுது!
குவலயத்து வாழ்வுதனில் நாமும் கூடவே நகர்ந்துதானே போய் ஆகனும்!

- கவிவளவன் 02-07-2022 (10.30 பி.எம்)